# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### கர்நாடக சங்கீதம்

al Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vav

சுட்டெண் .................................................. **தரம்: 06** **நேரம் - 2.00 மணித்தியாலம்**

பகுதி I

**01) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) சிரவண கலை எனப்படுவது?
   1) நடனம் 2) சங்கீதம் 3) சிற்பம் 4) ஓவியம்

2) தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர்?
   1) வீரமணி ஐயர் 2) சம்பந்தர்
   3) மு.நல்லதம்பி 4) சுப்பிரமணிய பாரதியார்

3) கண்ணன் புரிந்த லீலை எனும் பாடலின் இராகம்?
   1) தேஷ் 2) மோகனம் 3) சங்கராபரணம் 4) காபி

4) கண்ணபிரான் கையில் இருக்கும் வாத்தியம்?
   1) வீணை 2) புல்லாங்குழல் 3) தம்புரா 4) உடுக்கு

5) ஸ்வர வரிசைகள் பாடப்படும் இராகம்?
   1) சங்கராபரணம் 2) மாயமாளவகௌளை 3) ஆரபி 4) பிலஹரி

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

**02) தொடர்புபடுத்துக.**

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. சுருதி | வீணை |
| 2. ஸ்வரம் | ஆரோகணம் |
| 3. மண்ணை நம்பி | மாதா |
| 4. சரஸ்வதி | கோவை |
| 5. ஆரோசை | நாட்டார் பாடல் |

**(2 × 5 = 10 புள்ளிகள்)**

**03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. நாதம் இரண்டு வகைப்படும் ( )
2. ரி என்ற ஸ்வரத்தின் தமிழிசைப் பெயர் தாரம் ( )
3. நத்தார் பண்டிகை கிறீஸ்தவர்களால் கொண்டாடப்படுகிறது. ( )
4. அவரோகணத்தின் தமிழிசைப் பெயர் ஆரோசை ( )
5. தோடுடைய செவியன் எனும் தேவாரத்தை அருளியவர் திருஞானசம்பந்தர் ( )

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

**04) கீறிட்ட இடங்களை நிரப்புக**

**(மத்திமம், ஆரோகணம், நாட்டார் பாடல், தேசியகீதம், நட்டபாடை)**

1. தோடுடைய செவியன் எனும் தேவாரத்தின் பண் ........................................................ ஆகும்.
2. மண்ணை நம்பி எனும் பாடல் ........................................................ வகையைச் சேர்ந்தது.
3. நாட்டின் பெருமையைக் கூறும் பாடல் ........................................................ ஆகும்.
4. ம என்ற ஸ்வரத்தின் ஸ்வரப் பெயர் ........................................................ ஆகும்.
5. ஸ்வரங்கள் முறையே படிப்படியாக கூடிச் செல்வது ........................................................ எனப்படும்.

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

## பகுதி - II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) அ) ஸ்வரம் என்றால் என்ன?

ஆ) ஸப்த ஸ்வரங்களும் என்ன?

இ) ஸப்த ஸ்வரங்களையும் அவற்றின் தமிழிசைப் பெயர்களையும் தருக?

**(2 + 5 + 8 = 15 புள்ளிகள்)**

02) அ) ஆரோகணம் என்றால் என்ன?

ஆ) அவரோகணம் என்றால் என்ன?

இ) தமிழிசையில் ஆரோகண அவரோகணத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?

**(15 புள்ளிகள்)**

03) நீர் கற்ற தேவாரத்தினை இராகம், பண், தாளம், தலம் என்பவற்றைக் குறிப்பிட்டு எழுதுக.

**(15 புள்ளிகள்)**

04) வெசாக் பண்டிகை அல்லது றம்ழான் பண்டிகை பற்றி 10 வசனம் எழுதுக?

**(15 புள்ளிகள்)**